தமிழக சட்டப் பேரவை

[இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் நான்காவது சட்டப் பேரவையின் நான்காவது கூட்டத் தொடர்]

வெள்ளிக்கிழமை, 1968, ஆகஸ்ட் 16.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 10 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்புகள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1946-ல் இருந்து 1951-வது ஆண்டுவரை ராணிப்பேட்டை பொது கிராமப்புற தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு சட்டப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. டபிள்யூ. எஸ். சினிவாசராவ் அவர்கள் 4—4—1968 அன்று மறைந்துவிட்டதைக் குறித்தும்,

1957-ல் இருந்து 1962-வது ஆண்டுவரை ராதாபுரம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு சட்டப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. ஏ. வி. தாமஸ் அவர்கள் 12-5-1968 அன்று காலமானதைக் குறித்தும்,

1957-ல் இருந்து 1962-வது ஆண்டுவரை கிள்ளியூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு சட்டப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. ஏ. நேசமணி அவர்கள் 1—6—1968 அன்று மறைந்துவிட்டதைக் குறித்தும்,

1952-ல் இருந்து 1956-வது ஆண்டுவரை பனமங்களூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு சட்டப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. பி. வைகுண்ட பாலிகா அவர்கள் 6—6—1968 அன்று காலமானதைக் குறித்தும்,

இப்பேரவையின் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் தெரிவிக்கிறேன்.

மறைந்த பெரியவர்களுக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து, ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

(பேரவையில் எல்லோரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றார்கள்.)